உ

சிவமயம்



# நினைவு மலர்

அமரர்

# திருமதி பொன்சோதி தில்லைநடராசா

THE LATE

MRS. PONSOTHY THILLAINADARAJAH

உ
சிவமயம்

புத்தேன் உலகத்தும் ஈண்டும் பெறல் அரிதே
ஒப்புரவின் நல்ல பிற.

There is no pleasure in this or in the other world
Equal to the joy of being helpful to those around you
Do not lose the opportunity to those around you.



திதிவெண்பா

சீர்பெறு மன்மத வருஷத்தில் மாசிமாத
பூர்வபட்ச பிரதமை திதிதனிலே
பொன்சோதி தில்லைநடராசா
சென்றார் சிவலோகம் சிறக்க.

| | |
|---|---|
| தோற்றம் | மறைவு |
| 26/03/1942 | 10/03/2016 |





## துதிப்பாடல்கள்

ஔவையார்

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன் கோலம் செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும் தா

நல்வழி – ஔவையார்

சிவாயநம என்று சிந்தித்து இருப்பார்க்கு
அபாயம் ஒருநாளும் இல்லை உபாயம்
இதுவே மதியாகும் அல்லாத எல்லாம்
விதியே மதியாய் விடும்

திருஞானசம்பந்தர் - தேவாரம்
திருமுறை 1

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடைய சுடலைப்பொடிபூசி யென்னுள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மலரான்முனைநாட் பணிந்தேத்த அருள்செய்த
பீடுடைய பிரமாபுரமேவிய பெம்மானிவனன்றே.

பிடியதன் உருவுமை கொள மிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடி கண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

வேதமோதி வெண்ணூல்பூண்டு வெள்ளையெருதேறிப்
பூதஞ்சூழப் பொலியவருவார் புலியினுரிதோலார்
நாதாஎனவும் நக்காஎனவும் நம்பாஎனநின்று
பாதந்தொழுவார் பாவந்தீர்ப்பார் பழனநகராரே.

திருமுறை 2

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருஆலவாயான் திருநீறே.

என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே யிருங்கடல் வையத்து
முன்னம் நீபுரி நல்வினைப் பயனிடை முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரிசூழ் திரு வலஞ்சுழி வாணனை வாயாரப்
பன்னி யாதரித் தேத்தியும் பாடியும் வழிபடும் அதனாலே

திருமுறை 3

இடரினுந் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உன்கழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்தநஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோ எமை யாளுமா றீவதொன் றெமக்கில்லையேல்
அதுவோ வுனதின்னருள் ஆவடு துறையரனே.

காத லாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

தேவாரம் - திருநாவுக்கரசர் (அப்பர்)
திருமுறை 4

கூற்றாயினவாறு விலக்ககிலீர்
கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக்கே இரவும்பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக்கெடில
வீரட்டானத்துறை அம்மானே.

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன்னாமம் என்னாவில் மறந்தறியேன்
உலர்ந்தார்தலையிற் பலிகொண்டுழல்வாய்

உடலுள்ளுறு சூலை தவிர்த்தருளாய்
அலந்தேன் அடியேன் அதிகைக்கெடில
வீரட்டானத்துறை அம்மானே.

குனித்த புருவமுங் கொவ்வைச் செவ்
வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல்
மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற்
பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே
இந்த மாநிலத்தே.

திருமுறை 5

அன்னம் பாலிக்குந் தில்லைச்சிற்றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை
என்னம் பாலிக்கு மாறுகண் டின்புற
இன்னம் பாலிக்குமோ விப் பிறவியே

நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்கடன்னடி யேனையுந் தாங்குதல்
என்கடன் பணி செய்து கிடப்பதே.

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே.
நமச்சி வாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே.

திருமுறை 6

அப்பன்நீ அம்மைநீ ஐயனும்நீ
அன்புடைய மாமனும் மாமியும்நீ
ஒப்புடைய மாதரு மொண்பொருளும்நீ
ஒருகுலமுஞ் சுற்றமும் ஓரூரும்நீ
துய்ப்பனவும் உய்ப்பனவுந் தோற்றுவாய்நீ

துணையா யென் நெஞ்சந் துறப்பிப் பாய்நீ
இப்பொன்நீ இம்மணிநீ இம்முத்தும்நீ
இறைவன் நீ ஏறூர்ந்த செல்வன் நீயே.

எல்லா வுலகமு மானாய் நீயே
ஏகம்ப மேவி யிருந்தாய் நீயே
நல்லாரை நன்மை யறிவாய் நீயே
ஞானச் சுடர்விளக்காய் நின்றாய் நீயே
பொல்லா வினைக ளறுப்பாய் நீயே
புகழ்ச் சேவடியென்மேல் வைத்தாய் நீயே
செல்வாய செல்வந் தருவாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ

தேவாரம் - சுந்தரமூர்த்திநாயனார்
திருமுறை 7

பித்தா பிறைசூடி பெரு மானேஅருளாளா
எத்தான் மறவாதே நினைக் கின்றேன் மனத்துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்
நல்லூரருட் டுறையுள் அத்தா
உனக் காளாயினி அல்லேன் எனலாமே.

பொன்னும் மெய்ப்பொருளுந் தருவானைப்
போகமுந் திருவும் புணர்ப்பானைப்
பின்னை என்பிழையைப் பொறுப்பானைப்
பிழையெலாந் தவிரப்பணிப்பானை
இன்ன தன்மையன் என்றறி வொண்ணா
எம்மானை எளி வந்த பிரானை
அன்னம் வைகும் வயற்பழனத்தணி
ஆரூரானை மறக்கலு மாமே.

நத்தார் படை ஞானம்பசு ஏறிந்நனை கவிழ்வாய்
மத்தம் மதயானைஉரி போர்த்த மழுவாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேற்
செத்தாரெலும் பணிவான் றிருக்கேதீச்சரத் தானே.

திருவாசகம் - மாணிக்கவாசக சுவாமிகள்
திருமுறை 8

சோதியே சுடரே சூழொளி விளக்கே
சுரிகுழற் பணைமுலை மடந்தை

பாதியே பரனே பால்கொள் வெண்ணீற்றாய்
பங்கயத் தயனும்மா லறியா
நீதியே செல்வத் திருப்பெருந் துறையில்
நிறைமலர்க் குருந்தமேவியசீர்
ஆதியே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே.

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச் செம்மையே ஆய
சிவபதம் அளித்த செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே

பால்நினைத் தூட்டும் தாயினுஞ்சாலப் பரிந்துநீ
பாவியே னுடைய ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய தேனினைச் சொரிந்து
புறம்புறந்திரிந்த செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே

திருவிசைப்பா – திருமாளிகைத்தேவர்
திருமுறை 9

ஒளிவளர் விளக்கே உவப்பிலா ஒன்றே !
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே !
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே !
சித்தத்துள் தித்திக்கும் தேனே !
அளிவளர் உள்ளத்(து) ஆனந்தக் கனியே !
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

திருப்பல்லாண்டு – சேந்தனார்
திருமுறை 9

மன்னுக தில்லை வளர்கநம் பத்தர்கள் வஞ்சகர் போயகல
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து புவனி யெல்லாம் விளங்க

அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோமுக் கருள்புரிந்துபின்னைப் பிறவி யறுக்க
நெறிதந்த பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே

பாலுக்கு பாலகன் வேண்டி அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம் பலமே இடமாகப் பாலித்து
நட்டம் பயில வல் லானுக்கே பல்லாண்டு கூறுதுமே

திருமூலர் திருமந்திரம்
திருமுறை 10

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.
சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரும் ஆவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே

வாழ்கவே வாழ்க என் நந்தி திருவடி
வாழ்கவே வாழ்க மல மறுத்தான் பதம்
வாழ்கவே வாழ்க மெய்ஞ்ஞானத்தவன் தாள்
வாழ்கவே வாழ்க மலமிலான் பாதமே

கபிலதேவர்
திருமுறை 11

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

நம்பியாண்டார்நம்பி
திருமுறை 11

என்னை நினைந்தடிமை கொண்டென் இடர்கெடுத்துத்
தன்னை நினையத் தருகின்றான் - புன்னை
விரசு மகிழ் சோலை வியன்நாரையூர் முக்கண்
அரசுமகிழ் அத்திமுகத்தான்.

சேக்கிழார் - பெரியபுராணம்
திருமுறை 12

உலகெலாம் உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

ஆதியாய் நடுவுமாகி அளவு இலா அளவுமாகிச்
சோதியாய் உணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியா ஏகம் ஆகிப் பெண்ணுமாய் ஆணும் ஆகிப்
போதியா நிற்கும் தில்லைப் பொது நடம் போற்றி போற்றி

கச்சியப்பசிவாச்சாரியார் - கந்தபுராணம்
திருமுறை 12

திருவும் கல்வியம் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நமது உள்ளம் பழுக்கவும்
பெருகுமாளத்துப் பிள்ளையைப் பேணுவாம்

அருணகிரிநாதர் - திருப்புகழ்

சரணகம லாலயத்தை அரைநிமிஷ நேர மட்டில்
தவமுறை தியானம் வைக்க ...... அறியாத
சடகசட மூட மட்டி பவவினையிலே சனித்த
தமியன் மிடியால்மயக்க ...... முறுவேனோ
கருணைபுரியாதிருப்ப தெனகுறையி வேளை செப்பு
கயிலைமலை நாதர் பெற்ற ...... குமரோனே
கடகபுய மீதிரத் ந மணியணி பொன் மாலை செச்சை
கமழுமணமார் கடப்ப ...... மணிவோனே
தருணமிதை யாமிகுத்த கனமதுறு நீள்ச வுக்ய
சகலசெல்வ யோக மிக்க ...... பெருவாழ்வு
தகைமை சிவஞான முத்தி பரகதியு நீகொ டுத்து
உதவிபுரிய வேணு நெய்த்த ...... வடிவேலா
அருணதள பாத பத்மமது நிதமுமே துதிக்க
அரியதமிழ்தா னளித்த ...... மயில்வீரா
அதிசயமநேக முற்ற பழநிமலை மீதுதித்த
அழகதிருவேரகத்தின் ...... முருகோனே.

திருமக ளுலாவு மிருபுய முராரி
திருமருக நாமப் ...... பெருமாள்காண்
செகதலமும் வானு மிகுதிபெறு பாடல்
தெரிதரு குமாரப் ...... பெருமாள்காண்
மருவு மடியார்கள் மனதில் விளையாடு
மரக தமயூரப் ...... பெருமாள்காண்
மணிதரளம் வீசி யணியருவி சூழ
மருவு கதிர்காமப் ...... பெருமாள்காண்
அருவரைகள் நீறுபட அசுரர் மாள
அமர்பொருத வீரப் ...... பெருமாள்காண்
அரவுபிறை வாரி விரவுசடை வேணி
அமலர் குருநாதப் ...... பெருமாள்காண்
இருவினையி லாத தருவினைவி டாத
இமையவர்குலேசப் ...... பெருமாள்காண்
இலகுசிலை வேடர் கொடியினதி பார
இருதன விநோதப் ...... பெருமாளே.

## அருணகிரிநாதர் - கந்தர் அனுபூதி

முருகன் குமரன் குகன் என்று மொழிந்து
உருகும் செயல்தந்து உணர்வென்று அருள்வாய்
பொருபும் கவரும் புவியும் பரவும்
குரு புங்கவ எண்குண பஞ்சரனே.

## அருணகிரிநாதர் - கந்தர் அலங்காரம்

நாள் என் செயும் வினைதான் என் செயும்
எனை நாடி வந்த கோள் என்செயும்
கொடுங் கூற்று என்செயும்
குமரேசர் இரு தாளும்
சிலம்பும் சதங்கையும் தண்டயமும்
சண்முகமும் தோளும் கடம்பும்
எனக்கு முன்னே வந்து தோன்றிடினே

## திவ்யப்பிரபந்தம் - ஸ்ரீமன் நாராயணமூர்த்தி

அரு மறை முதல்வனை ஆழி மாயனை
கரு முகில் வண்ணனை கமலக் கண்ணனை
திருமகள் தலைவனை தேவ தேவனை
இருபத முளரிகள் இறைஞ்சி ஏத்துவாம்
(நம் ஆழ்வார்)

பச்சைமா மலைபோல் மேனி பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா அமரர் ஏறே ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான்போய் இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகர் உளானே

பல்லாண்டு பல்லாண்டு! பல்லாயிரத்தாண்டு!
பலகோடி நூறாயிரம்!! மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா! உன்சேவடி
செவ்வித் திருக்காப்பு!!
அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி
வடிவாய் நின்வல மார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு
வடிவார் ஜோதி வல்லுறையும் சுடர் ஆழியும் பல்லாண்டு
படைப்போர் புக்கு முழங்கும் அப்பாஞ்சஜன்னியமும் பல்லாண்டே

குலம் தரும் செல்வம் தந்திடும் அடியார்
படுதுயர் ஆயின எல்லாம்
நிலம்தரம் செய்யும் நீள்விசும்பு அருளும்
அருளொடு பெருநிலம் அளிக்கும்
வலம்தரும் மற்றும் தந்திடும் பெற்ற
தாயினும் ஆயின செய்யும்
நலம்தரும் சொல்லை நான்கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம்

## மற்றும் பக்திப் பாடல்கள்

### இலட்சுமி

பொன் அரசி நாராணனார் தேவி புகழ் அரசி
மின்னு நவரத்தினம் போல் மேனி அழகு உடையாள்
அன்னை அவள் வையம் எல்லாம் ஆதரிப்பாள்
ஸ்ரீதேவி தன் இரு பொற்றாளை சரண் புகுந்து வாழ்வோமே

திரண்டு முனிவர் இருபாலும்
சிறந்து தினமும் சேவிப்ப
வரம் தந்தருளும் பெண்கொடியை
வடிவேற் குமரன் மணக்கோலம் புரிந்த அழகை
இரு விழிக்கும் விருந்தாய் அருந்தும் புத்தமுதை
பரம் குன்றமர்ந்த செழும் திருவை

### சரஸ்வதி

தாவறும் உலகு எலாம் தந்த நான்முக தேவுதன் துணைவியாய்
செறிந்த பல்லுயிர் நாவு தோறும் இருந்திடும்
நலம் கொள் வாணிதன் பூவடி

முடிமிசை புனைந்து போற்றுவாம்.
ஆய கலைக ளறுபத்து நான்கினையு
மேய வுணர்விக்கு மென்னம்மை தூய
வுரப்பளிங்கு போல்வாளென் னுள்ளத்தி னுள்ளே
யிருப்பளிங்கு வாரா திடர்

அபிராமி
அபிராமிப்பட்டர்

கலையாத கல்வியும் குறையாத வயதும்
ஓர் கபடு வாராத நட்பும்
கன்றாத வன்மையும் குன்றாத இளமையும்
கழுபிணி இலாத உடலும்
சலியாத மனமும் அன்பு அகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலும்
ஒரு துன்பம் இலாத வாழ்வும்
துய்ய நின் பாதத்தில் அன்பும் உதவி
பெரிய தொண்டரொடு கூட்டு கண்டாய்
அலை ஆழி அறி துயிலும் மாயனது தங்கையே
ஆதி கடவூரின் வாழ்வே
அமுதீசர் ஒருபாகமாக அகலாத சுக பாணி
அருள்வாமி அபிராமியே

தனம் தரும் கல்வி தரும் ஒரு நாளும்
தளர்வு அறியா மனம் தரும்
தெய்வ வடிவும் தரும்
நெஞ்சில் வஞ்சம் இலா இனம் தரும்
நல்லன எல்லாம் தரும்
அன்பர் என்பவர்கே கனம் தரும்
பூம் குழலாள் அபிராமி கடைக் கண்களே

வாழ்த்தொலி
சேக்கிழார் - பெரியபுராணம்

வான் முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க
மன்னன் கோன்முறை அரசு செய்க
குறைவு இலாது உயிர்கள் வாழ்க
நான் மறை அறங்கள் ஓங்க நற்தவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகம் எல்லாம்.

**ஓம் சக்தி**
ஓம் சக்தியே பராசக்தியே
ஓம் சக்தியே ஆதி பராசக்தியே
ஓம் சக்தியே மருவூர் அரசியே
ஓம் சக்தியே ஓம் விநாயகா
ஓம் சக்தியே ஓம் காமாட்சியே
ஓம் சக்தியே ஓம் பங்காரு காமாட்சியே

## 108 போற்றி திருவுரு

| | | | |
|---|---|---|---|
| 1. | ஓம் | ஓம்சக்தியே | போற்றி ஓம் |
| 2. | ஓம் | ஓங்கார ஆனந்தியே | போற்றி ஓம் |
| 3. | ஓம் | உலக நாயகியே | போற்றி ஓம் |
| 4. | ஓம் | உறவுக்கும் உறவானவளே | போற்றி ஓம் |
| 5. | ஓம் | உள்ளமலர் உவந்தவளே | போற்றி ஓம் |
| 6. | ஓம் | ஓதரிய பெரும் பொருளே | போற்றி ஓம் |
| 7. | ஓம் | உண்மைப் பரம் பொருளே | போற்றி ஓம் |
| 8. | ஓம் | உயிராய் நின்றவளே | போற்றி ஓம் |
| 9. | ஓம் | மருவத்தூர் அமர்ந்தாய் | போற்றி ஓம் |
| 10. | ஓம் | மனமாசை தவிர்ப்பாய் | போற்றி ஓம் |
| 11. | ஓம் | கவலை தவிர்ப்பாய் | போற்றி ஓம் |
| 12. | ஓம் | கனகவெளி ஆனாய் | போற்றி ஓம் |
| 13. | ஓம் | புற்றாகி வந்தவளே | போற்றி ஓம் |
| 14. | ஓம் | பாலகி வடிந்தவளே | போற்றி ஓம் |
| 15. | ஓம் | பாமரர் துயர் துடைப்பாய் | போற்றி ஓம் |
| 16. | ஓம் | பண்ணாக இசைந்தாய் | போற்றி ஓம் |
| 17. | ஓம் | பாமலர் உவந்தாய் | போற்றி ஓம் |
| 18. | ஓம் | பாம்புரு ஆனாய் | போற்றி ஓம் |
| 19. | ஓம் | சித்துரு அமர்ந்தாய் | போற்றி ஓம் |
| 20. | ஓம் | செம்பொருள் நீயே | போற்றி ஓம் |
| 21. | ஓம் | சக்தியே தாயே | போற்றி ஓம் |
| 22. | ஓம் | சன்மார்க்க நெறியே | போற்றி ஓம் |
| 23. | ஓம் | சமதர்ம விருந்தே | போற்றி ஓம் |
| 24. | ஓம் | ஓங்கார உருவே | போற்றி ஓம் |
| 25. | ஓம் | ஒருதுவத்துக் குடையாய் | போற்றி ஓம் |
| 26. | ஓம் | நீள்பசி தவிர்ப்பாய் | போற்றி ஓம் |
| 27. | ஓம் | நிம்மதி தருவாய் | போற்றி ஓம் |
| 28. | ஓம் | அகிலமே ஆனாய் | போற்றி ஓம் |
| 29. | ஓம் | அண்டமே விரிந்தாய் | போற்றி ஓம் |
| 30. | ஓம் | ஆன்மிகச் செல்வமே | போற்றி ஓம் |
| 31. | ஓம் | அனலாக ஆனாய் | போற்றி ஓம் |

| | | | |
|---|---|---|---|
| 32. | ஓம் | நீராக நிறைந்தாய் | போற்றி ஓம் |
| 33. | ஓம் | நிலனாகத் திணிந்தாய் | போற்றி ஓம் |
| 34. | ஓம் | தூராக வளர்ந்தாய் | போற்றி ஓம் |
| 35. | ஓம் | துணிபொருள் நீயே | போற்றி ஓம் |
| 36. | ஓம் | காராக வருவாய் | போற்றி ஓம் |
| 37. | ஓம் | கனியான மனமே | போற்றி ஓம் |
| 38. | ஓம் | மூலமே முதலே | போற்றி ஓம் |
| 39. | ஓம் | முனைச்சுழி விழியே | போற்றி ஓம் |
| 40. | ஓம் | வீணையே இசையே | போற்றி ஓம் |
| 41. | ஓம் | விரைமலர் அணிந்தாய் | போற்றி ஓம் |
| 42. | ஓம் | தத்துவங் கடந்தாய் | போற்றி ஓம் |
| 43. | ஓம் | சகலமறைப் பொருளே | போற்றி ஓம் |
| 44. | ஓம் | உத்தமி ஆனாய் | போற்றி ஓம் |
| 45. | ஓம் | உயிர்மொழிக் குருவே | போற்றி ஓம் |
| 46. | ஓம் | நெஞ்சம் நீ மலர்வாய் | போற்றி ஓம் |
| 47. | ஓம் | நீள் நிலத் தெய்வமே | போற்றி ஓம் |
| 48. | ஓம் | துரிய நிலையே | போற்றி ஓம் |
| 49. | ஓம் | துரியா தீத வைப்பே | போற்றி ஓம் |
| 50. | ஓம் | ஆயிர இதழ் உறைவாய் | போற்றி ஓம் |
| 51. | ஓம் | அகிலமெலாம் ஆட்டுவிப்பாய் | போற்றி ஓம் |
| 52. | ஓம் | கருவான மூலம் | போற்றி ஓம் |
| 53. | ஓம் | உருவான கோலம் | போற்றி ஓம் |
| 54. | ஓம் | சாந்தமே உருவாய் | போற்றி ஓம் |
| 55. | ஓம் | சரித்திரம் மறைத்தாய் | போற்றி ஓம் |
| 56. | ஓம் | சின்முத்திரை தெரிப்பாய் | போற்றி ஓம் |
| 57. | ஓம் | சினத்தை வேரறுப்பாய் | போற்றி ஓம் |
| 58. | ஓம் | கையிரண்டு உடையாய் | போற்றி ஓம் |
| 59. | ஓம் | கரைபுரண்ட கருணை | போற்றி ஓம் |
| 60. | ஓம் | மொட்டுடைக் கரத்தாய் | போற்றி ஓம் |
| 61. | ஓம் | மோனநல் தவத்தாய் | போற்றி ஓம் |
| 62. | ஓம் | யோகநல் உருவே | போற்றி ஓம் |
| 63. | ஓம் | ஒளியென ஆனாய் | போற்றி ஓம் |
| 64. | ஓம் | எந்திரத் திருவே | போற்றி ஓம் |
| 65. | ஓம் | மந்திரத் தாயே | போற்றி ஓம் |
| 66. | ஓம் | பிணி தவர்த்திடுவாய் | போற்றி ஓம் |
| 67. | ஓம் | பிறவிநோய் அறுப்பாய் | போற்றி ஓம் |
| 68. | ஓம் | மாயவன் தங்கையே | போற்றி ஓம் |
| 69. | ஓம் | சேயவன் தாயே | போற்றி ஓம் |
| 70. | ஓம் | திரிபுரதாளே | போற்றி ஓம் |

# வம்சாவழி

தியாகநாயக முதலியார் வழிவந்த சண்முகம்பிள்ளை
+
இராசவல்லவ முதலியார் வழிவந்த விசாலாட்சிப்பிள்ளை

வேலாயுத முதலியார் வழிவந்த ஆறுமுகம்
+
விஜேந்திர முதலியார் வழிவந்த பார்வதிப்பிள்ளை

வினாசித்தம்பி

செல்வம்

**பொன்சோதி**
+
தில்லைநடராஜா

விசாகதிலகர்
+
சிவபாக்கியம்

# வம்சாவழி

- வீரேந்திர முதலியார் வம்சவழி
  - சின்னத்தம்பி + இராமாசி
    - தம்பு + இராசம்மா
      - சின்னராசாத்தி + இ.விசுவநாதர்
        - சுடர்விழி + சின்னப்பு
          - அனுஷா
        - மலர்விழி + மகேஸ்வரன்
          - தர்சிகா
          - தணிகா
        - சந்திரகுமார் + பிரேமலதா
          - றம்ஷன்
          - கிசோபன்
          - பவிதன்
        - கோகுலரூபன் + இந்.துயா
          - நேகா
          - நிகில்
      - தில்லைநடராஜா + **வி.பொன்சோதி**
        - நங்கடம்பநம்பி
        - மங்களமுருகநம்பி
        - குருதேவநம்பி + சுபத்திரா
          - விஸ்வறாஜ்
          - அட்சரா
        - யுகமணவாளநம்பி + றஜிதா
          - திபிஷன்
        - இங்கிதா + சிவரங்கன்
          - சௌமியா
          - சேயோன்
      - இன்பம் + வே.க.பாலசுந்தரம்
        - சண்முகசுந்தரம் + அவ்வை (யங் வை வை)
        - உமைதேவி + குமாரசூரியர்
          - இலசஷ்மி தேவி
          - கெங்கா தேவி
          - கந்தசூரியர்
        - லலிதாம்பிகா + அனுவர் யூசுஃப்

## ம்சாவழி

தலியார் ம்சவழி

சரவணை + சின்னத்தங்கம்

- இராசம்மா

ரம்

வை)

ா

.ப்

வி
வி

சிவபாக்கியம்
+
வி.விசாகதிலகர்

- யுவராச சிவசண்முகதிலகர் + கிறிசாந்தி
- சிவசண்முகதிலக துங்கர் + கலைச்செல்வி
- வித்தியாவினோதன்
- திருமாதேவி + கிறிஸ் டில்ஸன் அலெக்சாண்டர்

காயத்திரீசா

கேஸ்வன்
கிறிஷ்ணி

செல்வராணி
+
சி.காசிராசா

- தருமகுலராசா + கிருஷ்ணகுமாரி
- சித்திராதேவி + குலராசசேகரன்
- பிரதீவன் + நிருபா
- சுபத்திரா + குருதேவநம்பி

பவிதா
கனீஷா

தேனுசான்
தேவ்கன்
தேசாஹினி
சக்தீஸன்

தர்ணியா
அஷ்வின்யா

| | | | |
|---|---|---|---|
| 71. | ஓம் | ஒருதவம் தெரிப்பாய் | போற்றி ஓம் |
| 72. | ஓம் | வேம்பினை ஆள்வாய் | போற்றி ஓம் |
| 73. | ஓம் | வினையெல்லாம் தீர்ப்பாய் | போற்றி ஓம் |
| 74. | ஓம் | அஞ்சனம் அருள்வாய் | போற்றி ஓம் |
| 75. | ஓம் | ஆருயிர் மருந்தே | போற்றி ஓம் |
| 76. | ஓம் | கண்ணொளி காப்பாய் | போற்றி ஓம் |
| 77. | ஓம் | கருத்தொளி தருவாய் | போற்றி ஓம் |
| 78. | ஓம் | அருள் ஒளி செய்வாய் | போற்றி ஓம் |
| 79. | ஓம் | அன்பொளி கொடுப்பாய் | போற்றி ஓம் |
| 80. | ஓம் | கனவிலே வருவாய் | போற்றி ஓம் |
| 81. | ஓம் | கருத்தொளி தருவாய் | போற்றி ஓம் |
| 82. | ஓம் | மக்களை காப்பாய் | போற்றி ஓம் |
| 83. | ஓம் | மனநோயை தவிர்ப்பாய் | போற்றி ஓம் |
| 84. | ஓம் | எத்திசையும் ஆனாய் | போற்றி ஓம் |
| 85. | ஓம் | இதயமாம் வீணை | போற்றி ஓம் |
| 86. | ஓம் | உருக்கமே ஒளியே | போற்றி ஓம் |
| 87. | ஓம் | உள்ளுறை விருந்தே | போற்றி ஓம் |
| 88. | ஓம் | மலப்பிணி தவிர்ப்பாய் | போற்றி ஓம் |
| 89. | ஓம் | மனங் கனிந்து அருள்வாய் | போற்றி ஓம் |
| 90. | ஓம் | நாதமே நலமே | போற்றி ஓம் |
| 91. | ஓம் | நளின மலர் அமர்வாய் | போற்றி ஓம் |
| 92. | ஓம் | ஒற்றுமை சொல்வாய் | போற்றி ஓம் |
| 93. | ஓம் | உயர்நெறி தருவாய் | போற்றி ஓம் |
| 94. | ஓம் | நித்தமுங் காப்பாய் | போற்றி ஓம் |
| 95. | ஓம் | நேரமும் ஆள்வாய் | போற்றி ஓம் |
| 96. | ஓம் | பத்தினி பணிந்தாய் | போற்றி ஓம் |
| 97. | ஓம் | பாரமே உனக்கே | போற்றி ஓம் |
| 98. | ஓம் | வித்தையே விளக்கே | போற்றி ஓம் |
| 99. | ஓம் | விந்தையே தாயே | போற்றி ஓம் |
| 100. | ஓம் | ஏழையர் அன்னை | போற்றி ஓம் |
| 101. | ஓம் | எங்குவோர் துணையே | போற்றி ஓம் |
| 102. | ஓம் | காலனை பகைதாய் | போற்றி ஓம் |
| 103. | ஓம் | கண்மணி ஆனாய் | போற்றி ஓம் |
| 104. | ஓம் | சத்தியப் பொருளே | போற்றி ஓம் |
| 105. | ஓம் | சங்கடந் தவிர்ப்பாய் | போற்றி ஓம் |
| 106. | ஓம் | தத்துவச் சுரங்கமே | போற்றி ஓம் |
| 107. | ஓம் | தாய்மையின் விளக்கமே | போற்றி ஓம் |
| 108. | ஓம் | ஆறாதார நிலையே | போற்றி ஓம் |

**ஓம் சத்தி ஓம் சத்தி ஓம் சத்தி ஓம்!**
**ஓம் சத்தி ஓம் சத்தி ஓம் சத்தி ஓம்!**
**ஓம் சத்தி ஓம் சத்தி ஓம் சத்தி ஓம்!**
**ஓம்! ஓம்! ஓம்!**

## சீமாட்டி சோதி வாழ்க்கை வரலாறு

தற்காத்துத் தற்கொண்டாற் பேணிகத் தகை சான்ற
சொற் காத்துச் சோர்விலாள் பெண்

மங்கல மென்ப மனைமாட்சி மற்று அதன்
நன்கலம் நன் மக்கட்பேறு

English Translation by Singaporean ( Mathagal Moolai Origin)
Elayathamby V. Singam

She who guards her virtue, tenderly cares for her husband and maintains the reputation of both, is a good wife

A virtuous wife is a blessing and good children are its adornment

திருவள்ளுவரின் இந்த இரண்டு குறள்களே பொன்சோதி (வினாசித்தம்பி ) தில்லைநடராசா. அவவின் வாழ்க்கை இதன்படியேதான் அமைந்தது. தனது பத்தாவின் பெருமைக்கும் சுக வாழ்விற்கு பங்கம் வராமலும் பெற்ற பிள்ளைகள் ஊரார் உறவினர் புகழ சீராக பேணி வளர்த்ததே அவவின் கடந்த 45 வருட நல்வாழ்வின் பயன்.

இதன்முன் 30 வருடங்களும் - அப்பு அம்மாவுக்கு செல்ல மகளாகவும் அப்பப்பு அப்பாச்சிக்கு பணிபுரியும் பாக்கியம் பெற்ற பேத்தியாகவும் ஒரே சகோதரராகிய தம்பி முன்னேற்றத்திற்கு ஏதுவாகவும் வாழ்ந்தார்

வட்டுக்கோட்டை ( அமெரிக்கன் மிஸன் ) யாழ்ப்பாணக் கல்லூரியில் கல்வி ஆரம்பம். பின் புத்தளம் ( கத்தோலிக்க ) கொன்வென்ற் இரண்டு வருடம். கொழும்பு கல்கிசை ( அங்கிலிக்கன் ) மகளிர் உயர் பாடசாலையிலும் SSC எட்டு வருடங்கள் அவவின் பாடசாலை வளர்ச்சி. பாடசாலையில் கற்றது மட்டுமல்ல வாழ்க்கையில் கற்றதும் சிறப்புற்றதும் அவவின் வெற்றி. 1960 இல் பன்னக வேலை ( பனை ஓலை பாய் பெட்டி என்பன ) சின்ன மாமியிடம் பயின்று விற்பனரானார். தையல் வேலையும் மேற்கொண்டார். மகாபாரதம் அப்பப்புவுக்கு வாசித்து ஆசிபெற்றார் அறிவும் பெற்றார்.கீதை சொல் கர்மயோகம் பொருள் தெரிந்து கொண்டார்.

1959 தொடக்கம் சிறுவர்களுக்கு இலவச பாடம் உதவி குழந்தைகளை பாராட்டல் சீராட்டல் சிறிய தாயார் பிள்ளைகளுக்கு பெயர் இடுதல் பிள்ளைப்பெற்று பராமரிப்பு எனும் சில உதவிகளில் பங்கேற்று வாழ்த்தப்

பெற்றார். மூளாய் பிள்ளையார் ஆறாம் திருவிழா பணியும் மேற்கொண்டார். 1970 – 71 ஒரு வருடம் திருமதி வள்ளி சண்முகநாயகம் ( பெரியக்கா ) அவர்களின் Jasmine Textiles ஸ்தாபனத்தில் பணியாற்றி சக ஊளியர்கள் வாடிக்கையாளர்கள் என்போரால் மெச்சப்பட்டார். பெரியக்காவின் நல்லாசியும் கிடைத்தது.

பின் மாதகலில் 15 வருடங்கள் சென்ற வீட்டு வாழ்க்கையின் போதும் ஊரார் உளமார்ந்த அன்பு போற்ற நடந்து கொண்டார். யுத்கம் காலத்திலும் மனம் தழராது கடமையே கண்ணென குடும்பத்தைப் பேணினார். புதல்வனைத் தமிழுக்கு அர்ப்பணித்தும் ( இரண்டாவது மகன் மங்களமுருகநம்பி மகம் தனிற் பிறந்தோன் மாசிலா மேலோதன்) கலங்குதலை மறைத்து குடும்பத்தில் மற்றவர்களின் சௌகரியங்களுக்கு துணிந்து செயலுற்றார்.

Australia 20 வருட வாழ்விலும் கணவனும் அவவும் முந்திய 50 வருட வாழ்வு போலவே உற்றார் உறவினர்கள் ஊரார் எல்லோருடனும் மலர்ந்த முகத்துடன் பழகி நேசிக்கப்பட்டார்.

புகுந்த வீட்டில் மலர்ந்த உறவுகள் :

நங்கடம்பநம்பி, காலஞ்சென்ற மங்களமுருகநம்பி, குருதேவநம்பி, யுகமணவாளநம்பி, இங்கிதா ஆகியோரின் பாசமிகு தாயாரும், விசாகதிலகர் அவர்களின் அன்புச் சகோதரியும், விஸ்வநாதர்(இலங்கை) , காலஞ்சென்ற கந்தையா பாலசுந்தரம்(மலேசியா) , காசிராஜா(இலங்கை) ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும், சுபத்திரா, ரஜிதா, சிவரங்கன், சுடர்விழி(சுவிஸ்), மலர்விழி(ஜெர்மனி) , சந்திரகுமார்(நெதர்லாந்து), கோகுலரூபன்(பிரான்ஸ்) , சண்முகசுந்தரம்(மலேசியா), உமைதேவி(மலேசியா) , லலிதாம்பிகா, யுவராஜா, துங்கர், வித்தியாவினோதன், திருமாதேவி(இங்கிலாந்து) , தர்மகுலராஜா(டென்மார்க்) , சித்திராதேவி(இங்கிலாந்து) , பிரதீபன்(இங்கிலாந்து) ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான சின்னராசாத்தி, இன்பம், மற்றும் சிவபாக்கியம், செல்வராணி(இலங்கை) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், சௌமியா, விஸ்வராஜ், சேயோன், திபீஷன், அஷ்சரா ஆகியோரின் அன்புப் பாட்டியும் ஆவார்.

கூடி வாழ்ந்தால் கோடி நன்மை.
கோடி கோடி இன்பம் பெறவே கூடி வாழவேண்டும்.

## அம்மா

ஏக்கம் ஒரு புறம் புன்னகை மறு புறம் உனைச் சூழ
ஐ இரண்டு மாதங்கள் ஐவரையும் சுமந்து
அம்மா என நாம் தத்தி வருகையில்
ஆசை முத்தங்கள் பல தந்து
இங்கிதமாய் இசை பாடி
ஈ எறும்பு எமை தீண்டாமல்
உன் உயிருக்குள் எமை வைத்து
ஊன் உறக்கங்கள் பல மறந்தீர்
எட்டி அடி நாம் வைக்கையிலும்
சங்கடங்கள் வந்த போதும்
அஞ்ச வேண்டாம் என ஆறுதலூட்டுவீர்
ஒன்றாய் வாழ அறிவுரைகள் தினம் கூறி
ஒளிமயமான நல் வாழ்க்கை எமக்களித்து
ஔவையார் ஆகமுன்பே எம்மை
விட்டு கைலாயம் போநீர்
எம்வாழ்வு பொன்மயமாய் அமைய
சோதியே சுடரே தாயே நீங்கள்
காட்டிய வழி உயர்வோம்
எப்போதும் உன்வழி நடப்போம்.

**எம் நன்றி கூறும் சிறுதுளி இது, அம்மா !**
*நங்கடம்பநம்பி, குருதேவநம்பி, யுகமணவாளநம்பி & இங்கிதா*

## அமரர் பொன்சோதி தில்லைநடராஜா

**மருமக்கள் இரங்கல்:**

சுற்ற மெல்லாம் அதிசயிக்கத்
துன்பம் மறந்து நாம் வாழப்
பெற்ற பிள்ளை போலெம்மைப்
பேணிக் காத்தாய், மாமியுனை!
பெற்றம் இழந்த கன்றுகள்போல்
பிரிந்து வாடிக் கதறுகிறோம்!
நற்பே றுனக்கு கிட்டுதற்கு
நாங்கள் தினமும் வணங்கிடுவோம் !!

**சம்பந்திகளின் ஆதங்கம்:**

அன்புக் குரிய உறவினராய்,
அருமைக் குரிய சம்பந்தியாய்,
பண்புக் குரிய மாதரசாய்
பாசம் சொரியும் குலவிளக்காய்,

என்றும் எங்கள் மனத்திரையில்
இருக்கும் அன்புப் **பொன்சோதி**
ஆன்மா சாந்தி பெறுகவென
ஆண்டவன் பாதம் பணிகின்றோம் !!

## Dear Ammama ( அம்மம்மா ) – *Soumiya*

You were the best ammama for me and thamby Seyon in the whole entire wide universe. On my birthday you give me really good presents for my birthday. I wished you were alive. You always are happy and you smile and laugh a lot and that makes me laugh too. You were the one who told me how to draw and when I drew good I wrote good, You taught me so, so good. I love you. You always sleep with me. You are the best ammama in the whole wide universe. You make me laugh. You give me presents. You are always so nice. I hope you are having a good time with all the gods. Have a good rest, I love you. Please could you come back alive. I want to see you. You are so nice to go to this house and there. You will always be like so, so, so, so, so nice. Please I want you alive. You never hurt me but keep us happy.

## Dear Appachi - ( அப்பாச்சி ) – *Visvaraj*

Appache we are missing you a lot. When I heard the news I started crying. Then my sister Akshara started crying too. Then on Friday, I didn't go to school. You always talk very nice to me. You always come to our house and stay with us. Can you get me the Inumuas Rex. I hope that you would not mind me playing with my jurassic world game. Have a good rest appachi. We love you so much forever. Love from Vishvaraj and little Akshara

### Fond Memories

We miss the sound of your voice, the wisdom of your advise, stories of your life and just being in your presence. Will always remember your smiles and love. We were never bored around you as you always had interesting stories to tell about anything and everything. We love getting your birthday cards with photos especially in this modern age; makes so much more personal. It was very easy to see

the love you showered on your children and grandchildren and they will also miss you too.

*Singapore Navaretnam & Vickineswari Children Anitha and Sathesh*

**எங்கள் மாமி**

இல்லையென்று சொன்னதில்லை
இல்லையென்று சென்றுவிட்டீங்கள்
எத்தனை நாள்கள் புலம்ப வேணும்
இருக்கும் இடம் யார் சொல்வார்
மருமக்கள் கலங்குகின்றோம்
காலனுக்கு கடுகிதையம் இல்லையோ
கடவுளிடம் வேண்டுகின்றோம்
உங்கள் கருணைமுகம் காட்ட வேண்டும்

*காசிராசா செல்வராணி (தங்கை) புதல்வன் பிரதீவன்.*

**Extract from Speech in Praise of Mrs PonsothymThillainadarajah on Sunday, 13th March 2016 at Bunurong Crematorium - Stratus Chapel by Nephew Dr Shanmugasuntharam**

## Maami...

திருச்சிற்றம்பலம்

நங்கடம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்கடம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்கடன் அடியேனையுந் தாங்குதல்
என் கடன் பணி செய்து கிடப்பதே.

(திருநாவுக்கரசர்)

சோதியே சுடரே சூழொளி விளக்கே
சுரிகுழற் பணைமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள்வெண்ணீற்றாய்
பங்கயத் தயனுமா லறியா
நீதியே செல்வத் திருப்பெருந்துறையில்
நிறைமலர்க் குருந்தமே வியசீர்
ஆதியே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என் றரு ளாயே.

(மாணிக்கவாசகர்)

Thank you all for coming today, to honour and celebrate the life of Ponsothy Thillainadarajah. My name is Shan and I am her nephew.

We have lost an amazing dedicated ***அம்மா*** (amma, mother), a doting ***அப்பாச்சி/அம்மம்மா*** (apaachi/ammama, grandmother), a loving ***அக்கா***

)akka, sister), a wonderful அண்ணி (anni, sister-in-law), an incredible மாமி/பெரியம்மா (maami/periamma, auntie) and an awesome friend.

Maami was a beautiful soul. Her family meant the whole world to her. She was a conservative lady; always pleasant and was tireless in lovingly serving her family. She was always there for her husband standing by his side as his rock. Her children and the closely-knit loving family they form are shining examples of the loving and noble values she had imparted to them.

She had an impeccable memory. You might forget your own birthday, but not my Maami! She'll remind you of your birthday and also tell you your ராசி & நட்சத்திரம் (raasi & natchathiram, astrological sign) for added measure! We have a large extended family and we never failed to get a greeting card from Maami on our birthdays and anniversaries, wherever in the world we were. And as many of you will appreciate, our family really are all over the world these days!

Maami, was a genteel, kind and selfless lady, characters which endeared her to everyone she came in touch with and it is a great testament to her nature that she formed so many long lasting friendships over the years; namely, so many of you here today. Like her husband when he was alive, Maami was also an active member of the விக்டோரிய தமிழ் மூத்த பிரஜைகள் சங்கம் (Victoria Tamil Senior Citizen's Fellowship), where she made many of these friends.

The family of the late Madam Ponsothy Thillainadarajah, my Maami, will always be grateful for the compassion and empathy of all family and friends who have come from near and far. Thank you for embracing us with kind and loving words, and supporting us with your presence. It gives us the courage to face our tomorrows and consoles us in our time of grief.

My sisters and I count ourselves blessed to have had her as our Maami and to have been nurtured by her unconditional love and affection. We imagine Maami might be saying something like this to us now...

Don't grieve for me, for now I'm free,
I'm following the path God laid for me.
I took his hand when I heard his call,
I turned my back and left it all.

Be not burdened with times of sorrow,
I wish you the sunshine of tomorrow.
My Life's been full, I savoured much,
Good friends, good times, a loved one's touch.

I could not stay another day,
To laugh, to love, to work, to play.
Tasks left undone must stay that way,
I've found that peace at the end of the day.

If my parting has left a void,
Then fill it with remembered joy.
A friendship shared, a laugh, a kiss,
Ah, yes, these things too I will miss.

Perhaps my time seemed all too brief,
Don't lengthen it now with undue grief.
Lift up your heart and share with me,
God wanted me now, He set me free.

- Anne Lindgren Davison,
"I'm free", 1974

We miss you, Maami.

*கிற்பன், கில்லேன் என்றிலன்*
*முனம்நாளால்;*
*அற்ப சாரங்கள் அவைசுவைத்து*
*அகன்றொழிந்தேன்;*
*பற்பல் ஆயிரம் உயிர்செய்த*
*பரமா! நின்*
*நற்பொன் சோதித்தாள் நணுகுவது*
*எஞ்ஞான்றே?*

*(நம் ஆழ்வார்)*

*இன்ன வகையால் திருப்பணிகள்*
*எல்லா உலகும் தொழச் செய்து*
*நன்மை பெருகும் நமிநந்தி அடிகள்*
*நயமார் திருவீதிச்*
*சென்னி மதியும் திருநதியும்*
*அலைய வருவார் திருவாரூர்*
*மன்னர் பாத நீழல் மிகும்*
*வளர் பொன் சோதி*
*மன்னினார்*

*(சேக்கிழார்)*

*திருச்சற்றம்பலம்*

*Dr Shanmuhasuntharam, Umaithevi and Lalithambihaa,*
*children of late Palasuntharam and Inpam (sister).*

## தில்லைநடராஜர் முன் ஒளிரும் பொன்சோதி

பத்தொன்பது வருட
பாசத்தின் உருவம்
விட்டெனப் போனதுவோ !
விட்டகலாத நினைவுகளை
விதைத்துவிட்டே, விண்ணுலகம்.
கட்டுண்டு கிடப்பவர்களாகவே
கண்கலங்கி நிற்க்கின்றோம்.

வாழ்வில் கிடையா வரம் !
எம் வாழ்வியலின் வாசலில்
வதனம் மலர் அம்மாவாய்
வந்தமர்ந்தீரே ! எங்களின்

உயர் வாழ்வுக்காய் வாழ்த்தி
வாய் மலரும் வாழ்வே,
உங்கள் தாள் பயணம்
என்றாகத் தாய்க்கு இலக்கணம்
கற்பித்தாயே எங்கள் தாயே !

நங்கடம்பனை, மங்களனை,
குருதேவனை, யுகமணவாளனை
நல்ல நண்பர்களாகப் பெற்றோம்.
இதற்கு மேலாக இங்கிதாவை
தங்கையாய் பெற்றோம்.
தாயே! பெறாமல் பெற்ற
பிள்ளைகளாய் உங்கள் அன்பிலே
நனைந்தோம்! திளைத்தோம் !
வாசல் வந்தால் வட்டிலில்
சோறு அன்புகலந்து ஊட்டியே
விருந்தோம்பல் காணாது
விடைபெற்றதில்லையே !
இன்றோ, பேச வார்த்தைகள்
இன்றிக் கிடக்கின்றோம்!

துள்ளும் இளமையில் துடுக்குத்தனம்
நிறை கூட்டமாய் இருந்தாலும்,
தில்லை 'அங்கிள்' வீடுவந்தால் !
எங்கள் ஓசைகள் அடங்கும்
அந்த மீசையின் உருவின் பயத்தில்.
அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாள் ?
'அன்ரி' (அம்மா) முகம் கண்டால்
அடுத்த கணமே வேஷம் கலைந்துவிடும் !
கோஷமிடும் கூட்டமாய் எம் கொட்டத்தைக்
கூட ஆசையாய் பார்க்கும் அன்பின்
உருவங்களாயினர் ; அங்கிளும், அன்ரியும்!

நேசம் துளிர்த்த காலத்து நினைவில்
நனைகின்றது, நம் உள்ளங்கள். இனி
எல்லாம் நினைவுகள் என்றானதுவோ ?
காலம் கரைகிறது ! ஞாலத்தில்
வாழ்ந்தோம் என்பதல்ல வாழ்வு !
எப்படி வாழ்ந்தோம் என்பதற்கு

**வரவிலக்கணம் சூடினரே ! தில்லை
நடராஜருடன் துணையாய் ஒளிர்
பொன்சோதி என ஜோதியானார் !
திருவண்ணாமலை ஜோதி சேர்ந்தார் !**

**ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!**

*ஆறுதல் தந்த நிழலைத் தேடும் உறவுகளான பிள்ளைகளின் நண்பர்கள், மெல்பேண்.*

## The Rose Beyond The Wall

A rose once grew where all could see, sheltered beside a garden wall,
And as the days passed swiftly by, it spread its branches straight and tall…

One day, a beam of light shone through a crevice that had opened wide –
The rose bent gently towards it warmth then passed beyond to the other side…

Now you, who deeply feel its loss, be comforted – the rose blooms there –
Its beauty even greater now, nurtured by God's own loving care.

*Thinking of you with heartfelt Sympathy from Mr & Mrs Sivapathasingam family*

## நன்றி நவிலல்

எங்களுக்கு 31 நாட்களும் பல உதவிகளும் செய்து
ஆறுதல் மொழிகளும் சொல்லி துணைநின்ற
நண்பர்குழாம், உற்றார் உறவினர், மற்றும்
Ambulance , Police, Bunurong Memorial Park ( Stratus Chapel ) & Allison Monk House
சேவையாளர்களுக்கும், நாங்கள் நன்றி கூறுகின்றோம்.

***புத்திரர்கள், மகள், மருமக்கள்* & விசாகத்திலகர் குடும்பம்**



## கீதாசாரம்

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது
எது நடக்கின்றதோ அது நன்றாகவே நடக்கின்றது
எது நடக்க இருக்கின்றதோ அதுவும்
நன்றாக நடக்கும்
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக அழுகின்றாய்?
எதை நீ கொண்டு வந்தாய்
அதை நீ இழப்பதற்கு
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டுள்ளது
எது இன்று உன்னுடையதோ அது
நாளை மற்றொருவருடையதாகின்றது
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்
(பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்)